**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No. 167/2023                    நாள் :  08.06.2026</u>**

**<u>வா.சா.1– திருமதி. விஜயலெட்சுமி.</u>**

**குறுக்கு விசாரணை :–**

நான் பி.எஸ்.சி., நர்சிங் படித்துள்ளேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். வழக்குரை நான் சொல்லி தயாரிக்கப்பட்டது. இந்த வழக்கு பணபரிவர்த்தனைக்கு முன்பாக எனக்கும் பிரதிவாதிக்கும் மற்றும் என் கணவருக்கும் பிரதிவாதிக்கும் பணபரிவர்த்தனை இல்லை. என் கணவர் மாவு அரைக்கும் இயந்திரம் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். எனக்கும், பிரதிவாதிக்கும் என் வழக்குப்படி நேரடியான தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவரின் மூலமாகத்தான் எங்களுக்கு பிரதிவாதி பழக்கம் என்பதுதான் என் வழக்கு. 2017 ம் ஆண்டிலிருந்து பிரதிவாதியின் கணவர் முருகன் மெட்டல்ஸ் கடையில் வேலை செய்தபோது என் கணவருக்கு பழக்கம். நான் 2017 லிருந்து 2022 வரையில் குவைத்தில் செவிலியராக பணி செய்து வந்தேன். என் வழக்கின்படி பிரதிவாதியின் கணவர் என்னிடமும், என் கணவரிடமும் பணத்தை முதலீடு செய்தால் லாபம் தருவதாக பிரதிவாதியின் கணவர்தான் கூறியதாக சொல்லியுள்ளேன். பிரதிவாதி அவ்வாறு கேட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதியின் கணவர் பல நபர்களிடம் கடன் வாங்கி திருப்பி கொடுக்க முடியாமல் கடன் தொல்லையால் மருந்து குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்றால் சரிதான். அவரை நானும், என் கணவரும்தான் மருத்துவமனைக்கு சென்று பார்த்து வந்தோம் என்றால் சரிதான். அவர் தற்கொலை முயற்சி செய்வதற்கு முன்பாகவே நாங்கள் கடன் கொடுத்தோம். பிரதிவாதியின் கணவர் மேற்படி கடையில் வேலை செய்யும் தினக்கூலி என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் ஏழ்மை நிலையில் இருப்பதால் ரூபாய் 12 லட்சம் கொடுத்தால் அவரால் திருப்பி

கொடுக்க முடியாது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். வங்கியில் ஏலம் விடப்படும் நகைகளை ஏலத்திற்கு எடுப்பதாக பிரதிவாதி, அவரது கணவர் மற்றும் வசந்த் செல்வம் ஆகியோர் சென்றார்கள். பிரதிவாதிதான் என்னிடம் பணம் வாங்கினார். ரூபாய் 6 லட்சம் மேற்படி காரணத்திற்காக வாங்கினார்கள். ரெப்கோ வங்கியில் உள்ள அடமானத்தை மீட்பதற்காக ரூபாய் 5 லட்சம் பிரதிவாதி வாங்கினார்கள். அந்த விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூபாய் 12 லட்சத்தை நான்கு தவணைகளாக நான் கடன் கொடுத்தேன். ரொக்கமாக ரூ.2,50,000/-ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். மீதத்தொகையை பிரதிவாதி மற்றும் அவரது கணவரின் வங்கிக் கணக்கில் போட்டுவிட்டேன். இரண்டு வங்கி கணக்குகளிலும் எவ்வளவு தொகை போட்டேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. 2022 ல் பிரதிவாதியின் கணவரின் வங்கி கணக்கில் பணம் போட்டேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. 2023 ல் பிரதிவாதியின் வங்கி கணக்கில் பணம் போட்டேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. என் வங்கி கணக்கின் கணக்கு பட்டியலை தாக்கல் செய்தால் மேற்படி விபரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான். மேற்படி ஆண்டுகளில் பிரதிவாதி வங்கி கணக்கிலும், அவரது கணவரின் வங்கி கணக்கிலும் நான் பணம் போட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை. வழக்குரையில் 2021 காலகட்டத்தில் பிரதிவாதியும், அவரது கணவரும் ஊரை விட்டு ஓடிவிட்டதாகவும், 2023 ம் ஆண்டு அவர்களை கண்டுபிடித்ததாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் 2022 கடைசியில் ஓடி விட்டதாகவும், 2023 ல் கண்டுபிடித்ததாகவும் சொல்லியிருக்கிறேன்.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தூத்துக்குடி.